சுருக்கம்

கலையும் பண்பாடும் – திருவள்ளூர் மாவட்டம் மணவூர் குப்பம் கண்டிகை கிராமம் – அருள்மிகு ஸ்ரீ செங்கழனீர் அம்மன் திருக்கோயில் 228ஆம் ஆண்டு “ தீ மிதி ” பெருவிழா 30.04.2018 அன்று நடைபெற்றது – கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியது – செலவினங்களுக்காக ரூ.1,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண்.50

நாள்: 09–04–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், பங்குனி 26

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 197, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 20.08.2017
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். கடித எண். 2189/இ1/2018, நாள். 02.05.2018 மற்றும் 06.03.2019

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், குப்பம் கண்டிகை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீசெங்கழனீர் அம்மன் திருக்கோயிலில் 04.05.2015 அன்று நடத்தப்பட்ட 225ஆம் ஆண்டு தீமிதித் திருவிழாவில், காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளுக்கான செலவினங்களுக்காக ரூ.50,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், திருவள்ளூர் மாவட்டம், மணவூர் குப்பம் கண்டிகை கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீசெங்கழனீர் அம்மன் திருக்கோயிலின் 228ஆம் ஆண்டு தீமிதி பெருவிழாவில் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கீழ்க்கண்ட கலைக்குழுக்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டதாகவும், அதற்கு

ஏற்பட்ட செலவின விவரங்களையும் கீழ்க்கண்டவாறு காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் அளித்துள்ளதாக கலை பண்பாட்டு ஆணையர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | கலைக்குழுக்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் விவரங்கள் | காசோலை எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.வேணுகோபால் (கைச்சிலம்பாட்டம்) | 043135 / 30.04.2018 | 14,000/– |
| 2. | திரு.ஒய்.அமானுல்லா (பண்முகக் கலைக்குழு நிகழ்ச்சி) | 043136 / 30.04.2018 | 12,000/– |
| 3. | திரு.கு.சுந்தரமூர்த்தி (தெருக்கூத்து) | 043137 / 30.04.2018 | 25,000/– |
| 4. | திரு.ரா.கார்த்திக் (பொய்க்கால் குதிரை, கரகாட்டம் மற்றும் தப்பாட்டம் நிகழ்ச்சி) | 043140 / 30.04.2018 | 20,000/– |
| 5. | திரு.பி.சக்தி சண்முகம் (ஆன்மீகத் தமிழிசை நிகழ்ச்சி) | 043141 / 30.04.2018 | 20,000/– |
| 6. | போட்டோக்கள், பேனர்கள் மற்றும் சான்றிதழ்களுக்கான செலவினங்கள் | 043138 / 30.04.2018 | 9,000/– |
| | | மொத்தம் | 1,00,000/– |

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், திருவள்ளூர் மாவட்டம், மணவூர் குப்பம் கண்டிகை கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீசெங்கழனீர் அம்மன் திருக்கோயிலின் 228ஆம் ஆண்டு தீமிதி பெருவிழாவில் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு மேலே அட்டவணையில் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.1.00 இலட்சத்தினை 2018–2019ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று, திருவள்ளூர் மாவட்டம் மணவூர் குப்பம் கண்டிகை அருள்மிகு ஸ்ரீ செங்கழனீர் அம்மன் திருக்கோயிலில் 30.04.2018 அன்று நடைபெற்ற 228ஆம் ஆண்டு " தீ மிதி " பெருவிழாவில் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தொகைக்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
>
> (த.தொ.கு.2205 00 102 JA 30903)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 13527/ நிதி(கல்வி–II)துறை / 2019, நாள்.29.03.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்
<u>நகல்:-</u>
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

09/04/19
பிரிவு அலுவலர்

9.4.19